

# வறுமை மற்றும் முரண்பாடுகள் தொடர்பான ஆவணத் தொகுப்பு

பவானி லோகநாதன்

மார்ச் 2008

கற்கைத் தொடர் 02

cepa
centre for poverty analysis

# வறுமை மற்றும் முரண்பாடுகள் தொடர்பான ஆவணத் தொகுப்பு

**தொகுப்பு**
**பவானி லோகநாதன்**

**மார்ச்** 2008

**வறுமை ஆராய்ச்சி நிலையம், கொழும்பு**

வறுமை மற்றும் முரண்பாடுகள் தொடர்பான ஆவணத் தொகுப்பு

© வறுமை ஆராய்ச்சி நிலையம் 2008

முதலாவது பதிப்பு – 2008

ISBN: 978-955-1040-42-0

இலங்கை தேசிய நூலகம் - வெளியீட்டில் உள்ள பட்டியற் தரவு

லோகநாதன், பவானி

வறுமை மற்றும் முரண்பாடுகள் தொடர்பான ஆவணத் தொகுப்பு / தொகுப்பு பவானி லோகநாதன் - கொழும்பு: வறுமை ஆராய்ச்சி நிலையம், 2008. ப. 36 ச.மீ. 21

ISBN: 978-955-1040-42-0 விலை ரூபா: 350

i). 016 3625 டிடிசி 21 ii) லோகநாதன், பவானி - தொகுப்பு

1. ஆவணத் தொகுப்பு - வறுனம

அட்டை அமைப்பு: கருணாரட்ண & சன்ஸ் லிமிட்டெட்

பதிப்பு : கருணாரட்ண & சன்ஸ் லிமிட்டெட்
67, யுடிஎ கைத்தொழில் பேட்டை,
கட்டுவான வீதி,
ஹோமாகம,
இலங்கை.

வெளியீட்டு உரிமை: வறுமை ஆராய்ச்சி நிலையம்

வறுமை ஆராய்ச்சி நிலையத்தின் பதிப்புக்கள் தற்பொழுது பின்வரும் வகைகளைக் கொண்டுள்ளன; ஆய்வுகள், திரட்டிய தொகுப்புக்கள், செய்முறைக் கட்டுரைகள் மற்றும் விளக்கக் கட்டுரைகள்.

# அறிமுகம்

வறுமையும் சமூக முரண்பாடுகளும் ஒன்றின் மீதொன்று தாக்கம் புரிகின்றன. சமூக, பிராந்திய, மற்றும் உலகளாவியரீதியிலான முரண்பாடுகள், இனப்படுகொலைகளையும் ஆயுத மோதல்களையும் பெருமளவில் தோற்றுவிக்கின்றன. இவை மூலம் வறுமை மேலும் அதிகரிப்பது மட்டுமன்றி மனித உரிமைகளும் துஷ்பிரயோகத்திற்கு உள்ளாகின்றன. இவ்வகையில் தென்னாசியப் பிராந்தியத்தில் இலங்கை நாடானது ஒரு சிறந்த முன்னுதாரணம் எனக் கூறலாம். இங்கு இன, பிரதேசரீதியான பின்தங்கிய பொருளாதார சமூக முன்னேற்றம் உள்நாட்டுப் போரைத் தோற்றுவித்தது மட்டுமன்றி, பல்வேறு மனிதாபிமானப் பிரச்சினைகளுக்கும் அடிகோலியுள்ளது.

இந்த ஆவணத் தொகுப்பானது வறுமையும், அது சார்ந்த சமூக, பொருளாதார முரண்பாடுகளையும் தொடர்புபடுத்தும் நூல் வளங்களை இனம்காட்ட முற்படுகின்றது. இதில் கிராமிய, நகர்ப்புற வறுமை நிலைகள், ஆயுதப்போர்களினது பாதிப்பு என்பன பற்றிய தகவல்கள் சேர்க்கப்பட்டுள்ளன. மேலும், சமூக குழுக்களுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்புக்கள் சம்பந்தமாக விசேஷ தகவல்கள் நூல் வளக் குறிப்புக்களாக இக்கைநூலில் தரப்பட்டுள்ளன. இதற்காக தமிழ்ச் சஞ்சிகைகள், பத்திரிகைகள், அறிக்கைகள் மற்றும் மற்றும் இணையத் தளங்கள் மூலம் தகவல்கள் சேகரிக்கப்பட்டுள்ளன. நாட்டின் தற்போதைய யுத்த சூழலால் இவ்வாராய்ச்சியைப் பரந்த அளவில் செய்ய முடியாததையிட்டு நாம் மனம் வருந்துகிறோம். எனினும், எம்மால் முடிந்த அளவில் தகவல்களைச் சேகரித்துள்ளோம். இத்தகவல் திரட்டுக்கு உதவிய திரு. முனாஸ் அவர்களுக்கும், மகளிர் கல்வி, மற்றும் ஆய்வு நிறுவனத்தினருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிக்கிறோம். இந்நூலை மொழி பெயர்த்து உதவிய விபாஷா நிறுவனத்திற்கும் எமது நன்றி உரித்தாகுக.

இக்கைநூல் ஆய்வாளர்கள், ஆசிரியர்கள், மனிதாபிமானக் குழுக்கள், தொண்டர் நிறுவனங்கள் போன்றோரிற்கு உதவியாக இருக்குமென நம்புகிறோம்

**பவானி லோகநாதன்**
**மே 2007**

*''கேதீஸ் லோகநாதன் அவர்களுக்கு இந்நூல் சமர்ப்பணம்''*

# உள்ளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| **1.** | **சர்வதேசப் பரிமாணம்** | **1** |
| | **1.1 எண்ணக்கரு** | **1** |
| | **1.2 வறுமை மற்றும் முரண்பாடுகளிலுள்ள சமூகங்கள்** | **1** |
| | **1.3 பால்நிலை/பெண்கள்** | **2** |
| | **1.4 சிறுவர்** | **2** |
| **2.** | **இலங்கை** | **4** |
| | **2.1 கிராம மற்றும் நகர்ப்புற வறுமை** | **4** |
| | **2.1.1** அமைப்பு | 4 |
| | **2.1.2** முரண்பாட்டிலுள்ள சமூகங்கள் | **6** |
| | **2.2 போரினால் பாதிக்கப்பட்ட மக்கள்** | **6** |
| | **2.2.1** அமைப்பு | **6** |
| | **2.2.2** முரண்பாடுகளிலுள்ள சமூகங்கள் | **9** |
| | **2.3 சமூகத்தில் இடருக்குட்படக்கூடிய பலவீனமான குழுக்கள்** | **12** |
| | **2.3.1 பெண்கள்** | **12** |
| | அமைப்பு | **12** |
| | கிராம மற்றும் நகர்ப்புற வறுமை | **13** |
| | போரினால் பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்தோர் | **13** |
| | **2.3.2 சிறுவர்** | **14** |
| | அமைப்பு | **14** |
| | கிராம மற்றும் நகர்ப்புற வறுமை | **15** |
| | போரினால் பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்தோர் | **16** |
| | **2.3.3 இளைஞர்** | **18** |
| | அமைப்பு | **18** |
| | கிராமிய மற்றும் நகர்ப்புற வறுமை | **19** |
| | போரினால் பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்தோர் | **20** |
| | **2.4 உழைப்பு, தொழில் மற்றும் வாழ்வாதாரம்** | **20** |
| | அமைப்பு | **20** |
| | கிராம மற்றும் நகர்ப்புற வறுமை | **22** |
| | போரினால் பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்தோர் | **24** |
| | **2.5 பெருந்தோட்டத் தொழிலாளர்கள்** | **24** |
| | **நூலாசிரியர் அட்டவணை** | **27** |

# வறுமை மற்றும் முரண்பாடு அல்லது மோதல் - (தமிழ் ஆவணங்கள்)

## 1 சர்வதேசப் பரிமாணம்

### 1.1 எண்ணக்கருக்கள்

1. **செந்தில்வேல், C.K.** *“மனிதரும் சமூக வாழ்வும்”*. யாழ்ப்பாணம், தாயகம் பதிப்பகம். 1994, 80 பக்கங்கள்.

சமூகவியல் மற்றும் மானுடவியலின் அடிப்படை எண்ணக்கருக்களை விளக்கி மனித இனத்தின் பரிணாமத்தில் அவை பிரயோகமாகின்றதை விளக்கும் இந்நூல் மக்களும், சமூகமும் தொடர்பானது. 12 அத்தியாயங்களைக் கொண்டுள்ளது. இந்நூல், பழைய (பொதுவுடமை) கட்டமைப்பு, அடிமை, பண்ணைமுறை, முதலாளித்துவம், சோஷலிசம் மற்றும் சமூகத்தில் மதங்கள் வகிக்கும் பங்களிப்பு என்பவற்றையும் உள்ளடக்கியுள்ளது. மாணவர்களுக்கும், சமூக விழிப்புணர்வு கொண்டவர்களுக்கும் வாசிப்பதற்கு இலகுவான முறையில் ஓர் வழிகாட்டும் வளமாக இப்பிரசுரம் அமைந்துள்ளது.

2. **சண்முகலிங்கம், N.** *“மரபுகளும் மாற்றங்களும்”*. யாழ்ப்பாணம், நாகலிங்கம் நூல் நிலையம். 2001. 41 பக்கங்கள்.

இந்நூல் பாரம்பரிய சமூகமொன்றில் சமூக மாற்றங்களையும் அதில் கலாச்சார புத்துணர்ச்சியையும் பிரதிபலிக்கிறது. இப்பதிப்பு இலங்கையின் தமிழ்ச் சமூகத்தில், மோதல் காலங்களின் போதும், அதைத் தொடர்ந்த சமூக மாற்றங்களின் போதும் இடம்பெயர்வு, கல்வியறிவு, மனிதத் தொடர்புகள், வயது முதிர்ச்சி, சீதன முறை, சமூகச் செயற்பாடு, கலாச்சார தேக்கம் மற்றும் சமூக வாழ்வு என்பவற்றை ஆராய்கின்றது.

### 1.2 வறுமை மற்றும் முரண்பாட்டிலிலுள்ள சமூகங்கள்

3. *“ஆசியா முழுவதும் வறுமை அதிகம்”*. வீரகேசரி. 12 மார்ச், 2002.

குறைந்தபட்சம் 40% நிதி வறுமை ஒழிப்புத் திட்டங்களில் ஈடுபடுத்தப்படல் வேண்டும் எனும் நிபந்தனையுடன் ஆசிய அபிவிருத்தி வங்கி அரசிற்கு

கடன்கள் வழங்கிய நிகழ்ச்சித் திட்டம் பற்றி இக்கட்டுரை மீளாய்வு செய்கிறது. ஆசிய அபிவிருத்தி வங்கியின் ஆசிய நாடுகளுக்கான, குறிப்பாக அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளுக்கான அக்கருத்தியலை ஆராய்வதுடன், இக்கட்டுரையானது அபிவிருத்தி மீதான இக் கருத்தியலினால், இவ்வுபாயத்தின் பிரதான பகுதிகளான உரிமைப் பேறுகளற்ற சமூகங்களின் நல்லாட்சி மற்றும் சமூக-பொருளாதாரம் உரிமையளித்தல் மீதான தாக்கங்கள் பற்றியும் விரிந்துரைக்கிறது.

## 1.3 பால்நிலை/பெண்கள்

4. **மாதர் கல்வி வட்டம் (WEC)**. "*பெண்களும் உழைப்பும் சுரண்டலும்*" கொழும்பு பெண்கள் கல்வி மையம் (WEC). ஒக்டோபர் 1983. 31 பக்கங்கள் (WEC கையேட்டுப்பிரசுரம் இல.7)

மனிதனின் சமூக வரலாற்றில் தெரிவிக்கப்பட்டது போன்று பெண் தொழிலாளிகளின் மீதான பால்நிலை சுரண்டலை இக்கையேடு வெளிச்சம் போட்டுக் காட்டுகின்றது. முதலாளித்துவ சமூகத்தில், சமூக வர்க்கங்கள், பொருளாதார உற்பத்தி, பண்ணை முறை, தொழிலாளர் சுரண்டல் மற்றும் குறிப்பாக பெண் உழைப்பாளிகள் என்பவற்றுடன் தொழிலில் பால்நிலை வேறுபாடு மற்றும் பால்நிலை சுரண்டல் முறைகளிற்கு இட்டுச் செல்லும் சமூக கலாச்சார நன்னெறிகள் பற்றியும் இக்கையேடு குறிப்பிடுகின்றது.

## 1.4 சிறுவர்

5. "*குழந்தைத் தொழிலாளர்*". P.1-2 <u>பிரவாகினி</u>. இல. 9. 9 ஜுன், 1998.

அபிவிருத்திக் கட்டமைப்பினுள் சிறுவர் துஷ்பிரயோகம் பற்றிய பல்வேறு தோற்றங்களை இக்கட்டுரை குறிப்பிடுகின்றது. ஏழ்மையான குடும்பங்களிலிருந்தான, குடும்பத்தைப் பராமரிக்க உழைத்துச் சம்பாதிக்க வேண்டிய தேவையிலுள்ள சிறுவர்களே அதிகளவில் உழைப்புச் சுரண்டலிற்கு ஆளாகுகின்றனர். சிறுவர் உரிமைகளில் சொல்லப்பட்ட கல்வி மற்றும் வேறு அடிப்படைத் தேவைகளிலிருந்து இச் சிறுவர்கள் தடுக்கப்படுவதுடன், முறையான மற்றும் அதே போன்று முறைசாராத் துறைகளில் வலுக்கட்டாயமாக பணிபுரிவதற்கு தள்ளப்படுகின்றனர். உழைக்கும் இச்சிறுவர்களினால் ஈட்டப்படும் ஊதியம் குடும்பங்களின்

வறுமையைப் போக்குவதற்கு உதவுகின்றதா எனவும் இக் கட்டுரை கேள்வி எழுப்புகின்றது.

6. **ஸ்ரீ கோவிந்தசாமி, S.** *"சிறுவர்களின் உரிமைகளைப் பாதுகாப்பாய் பேணுவது தொடர்பாக அரசுகளைச் சார்ந்துள்ள இன்றியமையாத கடப்பாடுகள்"*. வீரகேசரி. 17 மே, 2007.

இக்கட்டுரை சிறுவர் பாதுகாப்பு மற்றும் நன்நிலைகள் தொடர்பான பின்வரும் விடயங்களை உள்ளடக்கிய ஐக்கிய நாடுகளினது சிறுவர் உரிமைகளிற்கான பட்டயத்தை மேற்கோள் காட்டுகின்றது.

- துஷ்பிரயோகங்களிலிருந்து பாதுகாப்பு
- குடும்பங்களின் மீள்ஒன்றிணைதல்
- அகதிச் சிறுவர்கள்
- ஆயுத மோதல்கள்
- சிறுவர் உடல் நலம்
- சமூகப் பாதுகாப்பு
- வாழ்க்கை நிலைமைகள்
- கல்வி
- சிறுவர் ஆட்கடத்தல்
- புனருத்தாரணம் மற்றும் கவனிப்பு

ஆயுத மோதல்களும், நீடிக்கும் யுத்தமும் சிறுவர் உரிமை மீறலுக்கு இட்டுச் செல்வதைக் குறிப்பிட்டு, ஐக்கிய நாடுகள், வருடாந்த ஐ.நா. வின் சிறுவர் வாரத்தை "போர் நிறுத்த வாரமாக" அறிவிக்க வேண்டுமென தன் அங்கத்துவ நாடுகளைக் கேட்டுக் கொண்டுள்ளது.

*"பலிக்கடாவாகும் பச்சிளம் பாலகர்கள்"/ தொகுப்பு* - **ஷீலா.** வீரகேசரி. 8 மே, 2005.

இக்கட்டுரை உலகம் முழுவதிலும் குறிப்பாக ஆயுத மோதல்களை எதிர்கொள்ளும் வளர்முகநாடுகளில் சிறுவர் துஷ்பிரயோகத்திற்கு வறுமைப்பிரச்சினையே பிரதானமான காரணமென சுட்டிக்காட்டும் 'யுனிசெப்' அறிக்கையை மேற்கோள் காட்டுகிறது. சிறுவர் ஆட்கடத்தல், சிறுவர் உழைப்பு மற்றும் சிறுவர் விபச்சாரம் என்பன இந்நாடுகளில் பெருமளவில் காணப்படுவதுடன், ஒவ்வொரு இரண்டு சிறுவர்களில் ஒருத்தர் கடுமையான வறுமை நிலைகளில் வாழ்வதாகவும் குறிப்பிடுகின்றது. சிறுவர்

துஷ்பியோகத்தை இல்லாதொழிக்குமுகமாக சிறுவர்களுக்கும் அவர்களது அடிப்படைத் தேவைகள் மற்றும் கல்வி போன்ற சிறுவர் நல நடவடிக்கைகளை வழங்கப்படுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டுமென 'யுனிசெப்' அமைப்பு நாடுகளைக் கேட்டுக்கொள்கின்றது.

## 2. இலங்கை

### 2.1 கிராம மற்றும் நகர்ப்புற வறுமை

#### 2.1.1 அமைப்பு

7. **சச்சிதானந்தன், சாந்தி.** *"வறுமையின் பிரபுக்கள்............: நிதிக் கொடை நிறுவனங்களை நோக்கிய பார்வை". பக்கம் 14-27.* வறுமையின் பிரபுக்கள். மட்டக்களப்பு, மன்று. 2003.

உலகம் முழுவதுமான நன்கொடைச் சமூகங்கள் மற்றும் உதவி முகவர் நிறுவனங்களின் கருத்தியலை விரிவாக பகுப்பாயும் இக்கட்டுரை அவற்றின் அமைப்புரீதியிலான பிரச்சினைகள், மற்றும் அடையாளம் காண்பதிலான நெருக்கடிகள் பற்றியும் ஆராய்கின்றது. அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் வறுமையைக் குறைக்க உதவுதாக உதவி வழங்கும் முகவர் நிறுவனங்கள் கூறுகின்றன. ஆயினும், அவற்றிற்கான ஆணை மற்றும் உள்ளதாகவிருக்கும் தன்மையில் அவை, வறியவர்களுக்காக பணிசெய்யும் அமைப்புக்களிலேயே தங்கியுள்ளன. இலங்கையைக் குறிப்பிடுகையில், வறிய சமூகங்கள், மற்றும் வறுமைக் குறைப்புக்காக பணியாற்றும் உள்ளூர் நிறுவனங்கள் என்பன உதவி முகவர் நிறுவனங்கள் மற்றும் மோதல்களுக்கான தீர்வுகாணல் விடயத்தில் வழி நடத்திச் செல்வதில் காத்திரமானதோர் பங்கை வகித்தல் வேண்டுமென இக்கட்டுரை ஆசிரியர் வலியுறுத்துகிறார்.

8. **கொழும்பு மாநகர சபை.** *"கொழும்பு நகருக்கான வறுமை ஒழிப்புத் திட்டம்"*. கொழும்பு. ஏப்பிரல் 2004. 12 பக்கம்.

இப்பிரசுரம், கொழும்பு நகரினுள், நகரின் வறுமை ஒழிப்புக்கான திட்டத்தை சுட்டிக்காட்டுகின்றது. மாநகர சபையினால் முன்சொல்லப்பட்ட உபாயங்கள் பின்வருவனவற்றை அடிப்படையாகக் கொண்டன:

- காணிக் குத்தகை;
- வாழ்க்கைக்கான அடிப்படை வசதிகளின்மை;
- நிலையான வருமானமின்மை;
- குடும்ப ஸ்திரமின்மை;
- வறியவர்களுக்காக பணிசெய்யும் சமூக நிறுவனங்கள்;
- போதியளவில் இல்லாத கடன் வசதிகள்;
- வறியவர்களை இனங்காண்பதில் போதியளவில்லாத ஆவணப்படுத்தல்;
- குடும்ப வன்முறைகள், சிறுவர் துஷ்பிரயோகம், தெருச் சிறுவர்கள், பாடசாலையிலிருந்து இடை விலகுவோர் மற்றும் போதை மருந்து துஷ்பிரயோகம் போன்ற சமூகப் பிரச்சினைகள்;
- பெருகும் நகர சனத்தொகைக்கான வீட்டுவசதிப் பிரச்சினைகள்;
- இப்பிரசுரம், DFID, UNDP மற்றும் *UMP[1] என்பவற்றுடன் இணைந்ததான மாநகர சபையின் குறுகிய கால மற்றும் நீண்ட கால திட்டங்கள் பற்றிக் கூறுகின்றது.

9. **கொழும்பு மாநகர சபை & GTZ.** *பின்தங்கிய குடியிருப்புக் களின் பங்களிப்பு முன்னேற்றம்.* கொழும்பு. பக்கம் 2.

இப்பிரசுரம், கொழும்பு மாநகர சபை எல்லைக்குள் வாழும் வசதி குறைந்த மக்களின் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்துவதற்கு நகர சேரிக்குடியிருப்புக்கள் மற்றும் அபிவிருத்தியடையாத பகுதிகளுக்கு நீர் வழங்கல் வசதிக்கான வழிவகைகளுக்கான வழிகாட்டல்களுடன் கூடியதான செயற்திட்டத்தை எடுத்துரைக்கின்றது. இச்செயற்திட்டம், GTZ பங்களிப்புடனான கொழும்பு மாநகர சபையின் ''பிறிமஸ்'' (PRIMUSS)[2] எனப் பெயரிடப்பட்டுள்ளது.

10. ''*தோட்ட மக்களை எட்டாத அரசின் போக்குவரத்துச் சேவை*''. <u>தினக்குரல்</u>. 12 நவம்பர், 2006.

மனிதத் தொடர்பாடல், வாழ்வாதாரங்கள் மற்றும் அடிப்படைத் தேவைகளின் வழிவகைகளுக்கான அவசியமானதோர் தேவையாக போக்குவரத்தின் முக்கியத்துவத்தை இப்பத்திரிகை கட்டுரை எடுத்துரைக்கிறது.

---

[1] *Urban Management Programme (நகர முகாமைத்துவ நிகழ்ச்சித் திட்டம்)

[2] PRIMUSS: Participatory Improvement of Underserved Settlements in Colombo (கொழும்பில் பின்தங்கிய குடியிருப்புக்களின் பங்களிப்புடனான முன்னனேற்றம்)

பெருந்தோட்டங்களிலுள்ள குறைந்த போக்குவரத்துச் சேவைகள் பற்றிக் குறிப்பிடுகையில் இக்கட்டுரை ஆசிரியர், கண்டி நகரத்தையும், அதையொட்டிய கிராம மக்களையும் குறிப்பாக வர்த்தகர்கள், மாணவர்கள் மற்றும் நோயாளிகள் ஆகியோரின் தினசரிப் பயணத் தேவையில் போதுமானளவு இல்லாத அரசுப் போக்குவரத்துச் சேவைகள் பற்றிக் குறிப்பிடுகின்றார். கண்டி மற்றும் அதன் நகர்புறப் பகுதிகளிற்கிடையான பேரூந்துப் போக்குவரத்துச் சேவைகளை அரசு மேம்படுத்துதல் வேண்டுமென இக்கட்டுரை கோருகின்றது.

### 2.1.2. முரண்பாட்டிலுள்ள சமூகங்கள்

11. **சாந்தன், P.V.** *"தகர்ப்பின் நுனியில் ஆதிவாசிகள்". 40-43 பக்கங்கள்.* <u>சமாதான நோக்கு</u>. குரல் 2. நோக்கு 1. ஜனவரி – பெப்ருவரி 2002.

இலங்கையின் பூர்வீக சமூகத்தின் சமூக – பொருளாதார நிலைமைகளை ஆராயும் இக்கட்டுரை, தங்களது பாரம்பரிய நிலங்களான மகாவலி அபிவிருத்தித் திட்டத்தின் (1983) கீழ் கையேற்றப்பட்ட காணிகளிலிருந்து வெளியேற்றப்பட்டு வேறு கிராமங்களில் புனருத்தாரணத்திற்காக குடியமர்த்தப்பட்ட நூற்றுக்கணக்கான வேடுவக் குடும்பங்கள் பற்றி கவனம் செலுத்துகிறது. அத்துடன் வடக்கும் மற்றும் கிழக்கிலிருந்து யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்த வேடர்கள் பற்றியும் இக்கட்டுரை எடுத்துரைக்கிறது. வேறு வேலைத் திறன்களின் பயிற்சிகளுக்கான வழிகளோ அல்லது மாற்றுத் தொழில் வாய்ப்புக்களோ இன்றி "வேடருமல்லாத விவசாயிகளுமல்லாத" அவர்களின் பாரம்பரிய வாழ்வாதாரங்கள் இழக்கப்பட்டது பற்றியும் இந்நூல் குறிப்பிடுகிறது.

## 2.2 போரினால் பாதிக்கப்பட்ட மக்கள்

### 2.2.1 அமைப்பு

12. **மோகன், சிவராஜா**. *"பத்திரிகை அறிக்கை". 24-10-2006. 3. பக்கம் (மூலம் - http://tamilnewsweb.com; 10/11/2006 அன்று அடையப்பெற்றது)*

ஆயுத மோதல் தொடங்கிய காலத்திலிருந்து இல்லாத கடுமையான உணவுப் பற்றாக்குறையை யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள மக்கள்

எதிர்நோக்குகின்றனர். மாவட்டத்தின் தற்போதைய சமூக – பொருளாதார நிலைமைகள் பற்றிக் குறிப்பிடும் இக்கட்டுரை உலர் உணவுப் பொருட்கள் மற்றும் உப உணவுப்பொருட்களின் விநியோகம், குறிப்பாக கூட்டுறவுக் கடைகள் மூலம் மேற்கொள்ளப்பட்டவை ஸ்தம்பித நிலையடைந்தது பற்றியும் குறிப்பிடுகிறது.

சுதந்திரமான போக்குவரத்தை விடுதலைப் போராளிகள் அனுமதிக்காத காரணத்தினால் மனிதாபிமான முகவர்கள் மற்றும் தனியார் முகவர்களால் யாழ்ப்பாணத்திற்கு உணவுப் பொருட்களை எடுத்துச்செல்ல முடியாததினால் அரிசி, மாவு மற்றும் பருப்பு போன்றவற்றின் விலைகள் கறுப்புச்சந்தையில் அதிகரிக்க வழிவகுத்தது பற்றியும் இக்கட்டுரை குறிப்பிடுகின்றது. தற்பொழுது பாதுகாப்பு படைகளின் கட்டுப்பாட்டிலுள்ள A9 பாதையை அரசு மீளத் திறக்கவேண்டுமென்பதுடன், மாவட்டத்தினுள் கொண்டுவரப்படும் உணவு மற்றும் அத்தியாவசியப் பொருட்களுக்கு விடுதலைப் போராளிகள் வரி அறவிடக் கூடாது எனவும் இவ்வாசிரியர் தன் கட்டுரையில் வேண்டுகின்றார்.

13. *"முரண்பாடு: காரணங்களும் விளைவுகளும்". பக்கம். 118-170 மற்றும் 223-243.* ராஜீவ விஜயசிங்க மற்றும் குழுவினர். கொழும்பு. சுதந்திர ஜனநாயகத்திற்கான அமைப்பு. 2002.

இது, நிலைமைகளை மோசமாக்கப் பங்களிக்கும் முரண்பாடுகளைத் தீர்ப்பதற்காக வடிவமைக்கப்பட்ட முறைகளை அதிகளவில் கொண்டும் இலங்கைச் சமூகத்தின் கண்ணோட்டங்களை அடிப்படையாகக் கொண்டு முரண்பாடுகளைக் கருப்பொருளாகக் கொண்ட கருத்தரங்குகளின் செயற்குறிப்புக்களின் தமிழ் மொழிப்பெயர்ப்பாகும். கீழுள்ளவை கலந்துரையாடப்பட்ட பிரதான எண்ணக்கருக்களாகும்.

- சிவில் முரண்பாட்டு நிலைகளில் வன்முறைகளும் பயங்கரவாதமும்;
- அவசரகால விதிகள்;
- தேர்தல் முறைகள்;
- வெளிப்படையான பொறுப்புக்கூறல்;
- உயர் கல்வி.

இந்நூலின் பிற்பகுதி, பல மொழிபேசும் பல்லின சமூகத்தின் தேவைகளையும், அபிலாசைகளையும் பூர்த்திசெய்கின்ற புதியதோர்

அரசியலமைப்பிற்கான சுதந்திரமான உத்தேசத் திட்டங்களையும் கொண்டுள்ளது. இப்பதிப்பு சிங்கள மொழிபெயர்ப்பையும் கொண்டுள்ளது.

14. **இலங்கை தேசிய சமாதானப் பேரவை.** "*யுத்தத்தின் இழப்புக்கள்: எதிர்காலத்திற்கான சவால்களும் முன்னுரிமைகளும்*". கொழும்பு 2003.

இந்நூல், இலங்கையின் சிவில் யுத்தத்தில் பொருளாதார, சமூக – அரசியல் மற்றும் மனித உயிர்கள் செலுத்திய விலை பற்றி குறிப்பிடும் ஆய்வின் திருத்திய தொடர் அறிக்கையாகும். இது, முன்னைய பதிப்பின் பிரதான கருப்பொருளின் சுருக்கத்தை வாசகர்களுக்கு இலகுவானதோர் முறையில் சில புள்ளிவிபரங்களின் இற்றை வரையிலான தரவுகளுடன் கீழ்வரும் கேள்விகளுக்கான விடைகளைத் தரமுனைகிறது.

- போரின் விலை என்ன?
- போரைத் தொடர்வதற்கான விலை என்ன?

போரின் விளைவுகள் குறித்து விவரிக்கும் இப்பதிப்பு ஈற்றில் போர்க் குற்றங்கள் மற்றும் மனித உரிமைத் துஷ்பிரயோகங்களின் உண்மைகள் மற்றும் இணக்கப்பாடுகளுடன் முடிவடைவதுடன், அனைவருக்கும் நிரந்தரமான சமாதானத்தையும், நீதியையும் வேண்டுகின்றது.

15. **தமிழ்மாறன், V.T.** "*இன முரண்பாடுகளைத் தீர்த்து வைப்பது எப்படி?*" பக்கம் 40-47. மனித உரிமைகள் ஆவணத்தொகுதி. தொகுதி 2. இல. 2 (2000).

'இனச்சுத்திகரிப்பு' எனும் ஓர் ஊக்குவிப்புடனான வன்முறைகள் மற்றும் இனப்படுகொலைகளை உச்சத்துக்கு கொண்டுசென்ற இன முரண்பாடுகளைத் தீர்ப்பதில் உலகில் பின்பற்றிய உபாயங்கள் பற்றி இக்கட்டுரையில் நூலாசிரியர் விளக்குகிறார் விபரித்துரைக்கப்பட்ட உபாயங்கள் பின்வருமாறு:

- சுய நிர்ணயத்திற்கான உரிமை;
- இனங்களை மீள ஒருங்கிணைத்தல்;
- மூன்றாம் தரப்பின் தலையிடுகை;
- கூட்டிணைந்த அரசாங்கத்தின் மூலமான ஆட்சி.

இக்கட்டுரை இலங்கை நிலைமைகள் குறித்து விளக்குவதுடன், ஈற்றில் தற்பொழுதுள்ள இன முரண்பாடுகள் கூட்டிணைந்த அரசாங்கத்தின் மூலமாக மட்டுமே தீர்க்கப்பட முடியும் எனக் கூறுகின்றது.

### 2.2.2. முரண்பாடுகளிலுள்ள சமூகங்கள்

16. *"அனர்த்தங்களால் பாதிக்கப்பட்டுள்ள வாகரைப் பகுதி மக்களுக்கு சர்வோதய நிலையம் உதவி"*. வீரகேசரி. 18 நவம்பர், 2006.

கிழக்கின், வாகரைக் கிராமத்தில் போரினால் பாதிக்கப்பட்ட சமூகங்களிற்கு சர்வோதய இயக்கத்தின் மனிதாபிமான உதவிகளை இச்செய்திக் கட்டுரை விரிந்துரைக்கின்றது. போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான உணவு, மருந்துவகைகள், உடைகள் மற்றும் கல்வி நடவடிக்கைகளில் இடையூறு ஏற்பட்ட சிறுவர்களிற்கான கல்வி உபகரணங்களென அவசர உதவி நடவடிக்கைகளை இயக்கத்தின் மட்டக்களப்புக் கிளை கொடுத்துதவியது. உள்ளக இடம்பெயர்ந்த அகதிகளில், பெண்கள் மற்றும் சிறுவர்கள் அதிகமாக தங்கியுள்ள நலன்புரி நிலையங்களில் தொண்டர்கள் பணியாற்றுகின்றனர்.

17. **அசோக்குமார், K.** *"சமாதானமே தமது பிரச்சினைகளைத் தீர்க்கும் எனத் திடமாக நம்பும் வன்னி மக்கள்"*. தினக்குரல். 27 பெப்ரவரி, 2000.

மோதல்களினால் பாதிக்கப்பட்டு மற்றும் உள்ளக இடம்பெயர்வுக்குள்ளாகி கடுமையான பொருளாதார நெருக்கடிகளுக்கு முகம் கொடுக்கும் வவுனியா மக்களின் சமூக-பொருளாதார நிலைமைகள் குறித்து இக்கட்டுரையாசிரியர் கவனத்தை திருப்புகிறார். அவசர நிவாரணங்களை அரசு வழங்கினாலும் கூட, குடிநீர், இருப்பிடம் மற்றும் சமூகத்திற்கான அடிப்படைத் தேவைகள் ஆகியவற்றுக்கு பெரும் தட்டுப்பாடு உள்ளது. அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளினது நிலைகளை ஒத்ததாகவே இருப்பதைக் காணமுடிகிறது. போரினால் பாதிக்கப்பட்ட மக்களும், அதே போன்று ஆயுதப் படைகளின் உறுப்பினர்களும் இனப்பிரச்சினைக்கான தீர்வின் மூலம் அடையப்பெறும் நிரந்தரமான சமாதானத்தையே விரும்புகின்றனர் என கட்டுரையாசிரியர் வலியுறுத்துகிறார்.

18. **ஹிஸ்புல்லா, S.H.** *"இலங்கையில் இனப்பிரச்சினையும் பலவந்தமாக வெளியேற்றப்பட்ட வடக்கு மாகாண முஸ்லிம்களும்: முல்லைத்தீவு முஸ்லிம்கள்".* கொழும்பு, வடக்கு வாழ் முஸ்லிம்களுக்கான உரிமை நிறுவனம். 1997, 173 பக்கம்; குறிப்புக்கள்; பின்னிணைப்பு; அட்டவணைகள்.

இப்பதிப்பானது, மோதல் நிலைமைகளில் இலங்கையின் வடக்கிலிருந்து வெளியேற்றப்பட்டு நாட்டின் ஏனைய பகுதிகளில் குடியமர்த்தப்பட்டு அவர்கள் வாழ்வில் ஓர் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்திய சமூக-பொருளாதார நிலைமைகளைப் படம் பிடித்துக் காட்டுகிறது. இடம் பெயர்ந்த ஒரு சமூகத்தின் கடந்த கால மற்றும் நிகழ்கால அனுபவங்களின் அடிப்படையில், இம்முஸ்லிம்களை அவர்களது பாரம்பரிய தாயகப் பிரதேசங்களில் மீளக் குடியமர்த்துவதே அவர்களது பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான ஒரே வழியென வலியுறுத்தும் இந்நூலாசிரியர் இது, மனித உரிமைக் கட்டமைப்பிற்குட்பட்ட விதமாக இனப்பிரச்சினையைத் தீர்ப்பதன் மூலம் அடையப்படலாம் எனவும் குறிப்பிடுகின்றார்.

19. **மாணிக்கவாசகம். P.** *"நரக வேதனைகளை அனுபவிக்கும் அகதிகள் (வவுனியா) நகரம்".* வீரகேசரி. 23 ஜனவரி, 2001.

அரசினால் நிர்வகிக்கப்படும் 14 நலன்புரி நிலையங்களில் கிட்டத்தட்ட 21,000 உள்ளக இடம் பெயர்ந்துள்ள மக்கள் வசிக்கும் வவுனியா நகரின் அச்சமூட்டும் வாழ்க்கை நிலைமைகளைச் இக்கட்டுரை ஆசிரியர் சுட்டிக்காட்டுகிறார். நீண்டுசெல்லும் யுத்தத்தின் ஓர் விளைவான இடப்பெயர்வினால், அங்குள்ளவர்களுக்கு உலர் உணவுகள் உட்பட்ட அவசர நிவாரணங்கள் கொடுக்கப்படுகின்றன. அங்குள்ளவர்கள், குடாநாடு, அதே போன்று வடக்கின் அரச கட்டுப்பாடில்லாத பகுதிகளிலிருந்து வந்த உள்ளக இடம்பெயர்ந்தோரையும் உள்ளடக்கியுள்ளது. இக்கட்டுரையானது, உள்ளக இடம்பெயர்ந்த மக்கள் முகம் கொடுக்கும் மனிதாபிமான பிரச்சினைகளை, குறிப்பாக அவர்களின் முகாமைவிட்டு உள்ளே, வெளியேயான நடமாட்டத்தின் பிரச்சினையால் அவர்களது ஊதியத்திற்கென வேலை செய்யும் முயற்சிகளில் கட்டுப்பாட்டை சுமத்துவது பற்றி குறிப்பாகச் சுட்டிக்காட்டுகிறது. இது, அவர்களது குறைந்தபட்சத் தேவைகளை நிவாரணங்கள் பூர்த்தியாக்க போதுமானதாக இல்லாத போது வெளியில் சென்று வேலை செய்து நாளாந்த ஊதியம் பெறுவதில் தங்கியிருப்போரிற்கு பெரும் இடையூறாக உள்ளது.

20. *“மனிதாபிமானப் பிரச்சினைகள் குறித்து ஆராய வெளிநாட்டுத் தூதுவர் குழு யாழ். விஜயம்”*. வீரகேசரி. 22 நவம்பர், 2006.

அவுஸ்திரேலியா, பிரிட்டன் மற்றும் சுவிற்சலாந்து நாட்டைச் சேர்ந்த சர்வதேச சமூகத்தின் பிரதிநிதிகள், வடக்கின் சிவில் யுத்தம் தொடர்பான மனிதாபிமானப் பிரச்சினைகள் குறித்து கண்டறிவதற்காக யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்துள்ளனர். இலங்கையின் அரச அதிகாரிகள் மற்றும் சிவில் சமூகத்தின் உறுப்பினர்கள் உட்பட இத் தூதுக் குழுவினர் அரச ஆயுதப்படைகளின் தலைவர்கள் மற்றும் மதத்தலைவர்களுடனும் போரினால் பாதிப்படைந்து உள்ளக இடம் பெயர்வுக்குள்ளானோருக்கான அவசர நிவாரணப் பொருட்களின் வழங்கல் தொடர்பான பிரச்சினைகள் குறித்துக் கலந்துரையாடினர்.

21. **தியாகராசா, S.** *“மட்டு. மாவட்டத்தில் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான வீடமைப்பு மீள் நிர்வாகத் திட்டம்”*. வீரகேசரி. 3 டிசம்பர், 2006.

இச் செய்திக் கட்டுரையானது மட்டக்களப்பு மாவட்டத்தில் போரினால் பாதிக்கப்பட்ட சமூகத்தினருக்கான 4 வருட வீடமைப்புத் திட்டம் பற்றி தெரிவிக்கின்றது. உலக வங்கியின் உதவியுடன் இலங்கை அரசு, பல்வேறு கிராமங்களில் வீட்டு உரிமையாளராகும் திட்டத்தை 3 கட்டங்களில் ஆரம்பித்துள்ளது. இத்திட்டத்திற்கான பயனாளிகள் தேர்ந்தெடுக்கப்படும் அடிப்படை மற்றும் வீடுகளின் சேதத்திற்கமைய உதவிகள் வழங்கப்படும் முறைகள் குறித்து விவரிக்கின்றது. வடக்கு மற்றும் கிழக்கிற்கான புனருத்தாரண நிகழ்ச்சித் திட்டத்தில் இது ஓர் முதல் வகையாகும்.

22. *“யாழ். குடாநாட்டில் நிலவும் பஞ்சத்தை முடிவுக்கு கொண்டு வரவேண்டும்: தெற்கிலுள்ள சிங்கள கலைஞர்களின் ஒன்றியம் வெளியிட்டுள்ள பிரகடனம்”*. வீரகேசரி. 10 நவம்பர், 2006.

யாழ். குடாநாட்டில் எல்லாப் போர் நடவடிக்கைகளையும் நிறுத்தி போரினால் உள்ளக இடப்பெயர்வுக்குள்ளான மக்கள் தங்களது வசிப்பிடங்களுக்கு திரும்ப உதவுமாறு தெற்கிலுள்ள கலைஞர்கள் மற்றும் நடவடிக்கைகளுக்கான ஒன்றியம் அரசை வலியுறுத்துகிறது. திரைப்படத்துறை, ஊடகம் மற்றும் நாடகக் கலைஞர்களை உறுப்பினர்களாகக் கொண்ட இவ்வொன்றியம், வடக்கில் பட்டினி மற்றும், வறுமைக்கு வழிகோலும் உணவு. சுகாதார நலம், பாதுகாப்பான

போக்குவரத்து மற்றும் இருப்பிடங்களுக்கான பற்றாக்குறைகளிற்கான பிரச்சினைகளை தீர்க்குமாறு அரசை கோரியுள்ளனர்.

## 2.3 சமூகத்தில் இடருக்குட்படக்கூடிய பலவீனமான குழுக்கள்

### 2.3.1 பெண்கள்

#### அமைப்பு

23. **செல்வராணி, I.** "*பெண் பாலியல் தொழிலாளர்கள்: ஒரு சமூகப் பொருளாதார உளவியல் நோக்கு". P.......* நிவேதினி, தொகுதி, 11. இல.1. டிசம்பர் 2006.

பெண்கள் விபச்சாரத்தில் ஈடுபடுவதற்கான மூலகாரணங்களாக கடும் வறுமையும், முறையான கல்வியறிவின்மையும் உள்ள இந்நாட்டில் பெண் பாலியல் தொழிலாளர்கள் முகம் கொடுக்கும் சமூக – பொருளாதார மற்றும் சமூக உளவியல் பிரச்சினைகள் பற்றி இவ்வாய்வுக் கட்டுரை ஆராய்கின்றது. இவ்வாராய்ச்சியின் மீளாய்வானது, ஆணாதிக்க சமூகக் கட்டமைப்பில் பாலியல் சுரண்டல்கள் மற்றும் பால்நிலை அநீதியும் நிலவுவதாக தெளிவுபடுத்தி பின்வரும் பரிந்துரைகளை நல்குகிறது.

- மாற்றுத் தொழில்களுக்கான வாய்ப்புக்கள் மற்றும் சேமிப்பு பழக்கத்தை ஊக்குவித்தல்;
- பாலியல் தொழிலாளர்களிற்கான புனருத்தாரணமும், ஒருங்கிணைத்தலும்;
- வசதியற்ற சமூகங்களின் அடிப்படைத் தேவைகளிற்கான வழிவகைகளை ஏற்படுத்தல்;
- முறையான கல்வி நடவடிக்கைகளும், வறுமைக் குறைப்பு முறைகளும்;
- உடலுறவு மூலம் பரவும் நோய்கள் பற்றிய விழிப்புணர்வு உட்பட உடல்நலக் கல்வி.

இப்பரிந்துரைகள் பால்நிலை சார்ந்த அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களில் ஒருங்கிணைக்கப்படல் வேண்டுமென இக்கட்டுரை வலியுறுத்துகின்றது.

### கிராம மற்றும் நகர்ப்புற வறுமை

24. **சர்வதேச தொழில் தாபனம் (ILO).** *"பெண்கள் மற்றும் சிறுமிகள் தொடர்பிலான வஞ்சக் கடத்தல்". ஒரு தகவல் வழிகாட்டி.* ஜெனிவா, 2006 48 பக்கம்.

இந்த வழிகாட்டியானது, இலங்கையில் வெளிக்கொணரப்பட்ட பெண்கள் மற்றும் சிறுமிகள் தொடர்பான ஆட்கடத்தல் குற்றங்கள் பற்றி கூறுகின்றது. பெருந்தோட்டத் தொழிலாளிகள், சுதந்திர வர்த்தக வலய ஊழியர்கள், உள்ளக இடம்பெயர்ந்தவர்கள் மற்றும் அகதிகள் தொடர்பாக குறிப்பிடுகையில் இப்பதிப்பு, பாலியல் சுரண்டல்கள் மற்றும் பலவந்தமாக பணிக்கமர்த்தல் போன்றவற்றிற்கான ஆட்கடத்தலிற்கு வறுமையே வழிகோலுகின்ற பிரதான காரணியென விபரிக்கின்றது. இலங்கையில் ஆட்கடத்தல் தொடர்பான சட்டங்கள் மற்றும் ஆட்கடத்தலை எதிர்த்து போராடுவது தொடர்பான முனைப்புக்கள் பற்றியும் இந்நூல் மேலும் விபரிக்கிறது.

### போரினால் பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்தோர்

25. **கிருஷ்ணதேவி, E.**"*பெண் தலைமைத்துவக் குடும்பங்களும் அவற்றின் சமூக, பொருளாதார நிலைகளும்.*" P ……. நிவேதினி, தொகுதி. 11. இல.1. டிசம்பர் 2006

இந்த ஆய்வு, குடும்பங்களின் தலைவிகளாக, விதவைகள் மற்றும் கைவிடப்பட்ட பெண்கள் எதிர்கொள்ளும் சமூகப் பிரச்சினைகளை ஆராய்கின்றது. இது பின்வரும் விடயங்களை கையாள்கின்றது.

- சமூகப் பிரச்சினைகள்-பழிச்சொல் கூறல், பாலியல் துஷ்பிரயோகம், சுதந்திரமின்மை, மறுமணம் செய்துகொள்வதற்கான சுதந்திரமில்லாமை;
- கல்வி தொடர்பான பிரச்சினைகள்-முறையான கல்வியின்மை அதிகளவில் குறைவான வேலைவாய்ப்புக்கும், பாலியல் சுரண்டலிற்கும் வழிகோலுதல்;
- பொருளாதாரப் பிரச்சினைகள்-பொருளாதாரச் செயற்பாடுகளில் பால்நிலை காரணமாக ஓரங்கட்டப்படல், குறைந்த ஊதியம், நிதித் தேவை சார்ந்து தங்கியிருத்தல்.

வவுனியா மாவட்டத்தின் பல்வேறு சமூகம் மற்றும் சமயத்தைச் சார்ந்த பெண் தலைமைத்துவக் குடும்பங்களின் நேர்காணல்களை அடிப்படையாகக் கொண்டு இவ்வாய்வு, பெண்களின் ஆற்றல் அபிவிருத்திக்கான பயிற்சி மற்றும் பெண்களிடையேயான வினைத்திறனான தொடர்பாடல் முறைகள் மூலம் விழிப்புணர்வை ஏற்படுத்துவது குறித்து பரிந்துரை செய்கிறது.

26. **முகுந்தன், P.** "*இடம்பெயரும் பெண்களின் பிரத்தியேகப் பிரச்சினைகள்*". P……… நிவேதினி. தொகுதி 11. இல.1. டிசம்பர் 2006.

இலங்கையின் நீண்ட கால யுத்தத்தினால் உருவாக்கப்பட்ட உள்ளக இடம்பெயர்வுகளில் பால்நிலைரீதியிலான தாக்கங்கள் பற்றி இவ்வாராய்ச்சிக் கட்டுரையின் ஆசிரியர் குறிப்பிடுகின்றார். இடம் பெயர்கின்ற நடைமுறைகளின் போது உடல்ரீதியாகவும், மனரீதியாகவும் பாதிப்படைகின்ற பிரதான சாராராக பெண்கள் உள்ளதுடன் குடும்பத்தின் நன்நிலைகளிலும் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடியவர்களாகவும் உள்ளனர். வவுனியா மாவட்டத்தின் சமூக உளவியல் ஆலோசனை நடவடிக்கைகளில் ஈடுபட்டவராக, கட்டுரையாசிரியர், சமூகத்தில் அதிகளவில் அவதானிக்கப்படும் கல்வியறிவு அதிகமின்மையின் விளைவான அச்சம் மற்றும் பாதுகாப்பின்மை, தொழில் ஆற்றல் மற்றும் குடும்ப வன்முறைகளுக்கு முகம்கொடுக்கின்ற இடம்பெயர்ந்த பெண்களின் உடல்நலம் பற்றி ஆராய்கிறார்.

### 2.3.2 சிறுவர்

#### அமைப்பு

27. **ஜோக்கிம், P.** "*மலையக பெருந்தோட்டச் சிறுவர்களின் மனிதாபிமானப் பிரச்சினைகள்*". அரச திணைக்களத்தால் முற்றாகப், புறக்கணிக்கப்படும் பரிதாப நிலை! வீரகேசரி. செப்டெம்பர், 9, 2000.

தோட்டத் தொழிலாளிகளின் பிள்ளைகளிற்கு ஆரம்பக் கல்வி மற்றும் சுகாதாரக் கவனிப்பு போன்றவற்றின் குறைபாடுகளை ஆராய்ந்து, பெருந்தோட்டத் துறை சிறுவர்களின் மனிதாபிமானப் பிரச்சினைகள் பற்றி இக்கட்டுரை விளக்குகிறது. இலங்கையின் சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையினால் கூறப்பட்டுள்ளது போன்ற சிறுவர் பாதுகாப்புக்கும்,

கவனிப்புக்கும் இக்கட்டுரையாசிரியர் கோருகிறார். பெருந்தோட்டச் சமூகத்தின் மேம்பாட்டிற்காக சேவையாற்றும் பிறிட்டோ (BRITO) எனப்படும் ஓர் அரச சார்பற்ற நிறுவனம் சிறுவர் பிரச்சினைகள் தொடர்பான விழிப்புணர்வை உருவாக்குவதற்கான தனது பரிந்துரைகளில், ஒக்டோபர் மாதத்தின் முதல் வாரத்தை "பெருந்தோட்டச் சிறுவர் வாரம்" என அறிவிக்கும்படி இலங்கை அரசாங்கத்தைக் கோரியுள்ளது.

### கிராம மற்றும் நகர்புற வறுமை

28. **மணியம், P.S.** "*அநாதரவான சிறுவர்களுக்கு அபயமளிக்கும் எஸ்.ஓ.எஸ்*". வீரகேசரி 30 ஜனவரி, 2000.

இக்கட்டுரை எஸ்.ஓ.எஸ். கிராமத்தின் கொள்கையை, விசேடமாக தமிழ்ச் சிறுவர்கள் தங்கியுள்ள நுவரெலியாவிலுள்ளதை குறிப்பிட்டுச் சுட்டிக்காட்டுகிறது. இக்கிராமத்திலுள்ளவர்களில் வசதியற்ற பெருந்தோட்டச் சமூகம் அதே போன்று சிவில் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட வடக்கு மற்றும் கிழக்கிலிருந்தான சிறுவர்களும் அடங்கியுள்ளனர். கிராமத்தினுள் சிறுவர் அபிவிருத்திக்கு ஊக்கம் அளிக்கும் ஓர் சூழலில் இன ஒருமைப்பாட்டுடனான ஓர் சூழ்நிலையில் அடிப்படைத் தேவைகளுடன் வளர்ப்புப் பெற்றோருடன் கூடியதான ஒரு இல்லத்தின் ஏற்பாடு பற்றி ஆசிரியர் குறிப்பிடுகிறார்.

29. **சிவம், S.P.** "*மலையக தொழிற்சங்கங்கள், சமூக அமைப்புக்கள் கல்விக்கு கைகொடுக்க முன்வரவேண்டும்*". தினக்குரல். 12 நவம்பர், 2006.

இக்கட்டுரையில் ஆசிரியர் பெருந்தோட்டங்களில் சிறுவர்களிற்கான கல்வி வசதிகளின் குறைந்த தரம் பற்றி கூறுகிறார். பாடசாலைகளில் தகுதியான ஆசிரியர்களின் பற்றாக்குறை மற்றும் அடிக்கடி வழங்கப்படும் ஆசிரியர்களின் இடமாற்றங்கள் என்பன தோட்டப்புற ஏழைச் சிறுவர்களின் கல்வியில் பெரும் பின்னடைவை உருவாக்குகின்றன. இக்கட்டுரை தொழிற்சங்கங்கள், சமயக் குழுக்கள் மற்றும் பெருந்தோட்ட சமூகத்திற்காக பணியாற்றும் சிவில் சமூகங்களிடம், தோட்டத் தொழிலாளர்களின் பிள்ளைகளும் தோட்டத் தொழிலாளர்களாக உருவாவதை தடுக்கும் வகையில் அவர்களிற்கான ஆரம்ப/நடுநிலை பாடசாலைக் கல்வி மற்றும் அதே போன்று உயர் கல்வியைப் பெற்றுக்கொள்வதற்கு உதவுமாறு கோரிக்கை விடுக்கின்றது.

30. **சந்திரப்பிரகாஷ்., S.** “*சிறுபிள்ளை வேளாண்மை இங்கு வீடு போய்ச் சேர்கிறது*”. தினக்குரல். 19 மார்ச், 2000.

இச்செய்திக் கட்டுரைப்படி, குறிப்பாக வடக்கு, கிழக்கிலான சிவில் யுத்தம் மற்றும் கடும் வறுமை காரணமாகவும், கொழும்பு நகர் கணிசமானளவு சிறுவர் தொழிலாளிகளைக் கொண்டுள்ளதாக தெரியவருகிறது. அநேகமான சிறுவர்கள் ஏழ்மையான குடும்பத்திலிருந்து வந்தவர்களாகவும், ஆபரணத் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களாவும், துரதிஷ்டமான நிலைகளின் கீழ் வாழ்பவர்களாகவும் உள்ளனர். நாட்டின் கிராமப்புற, மற்றும் புறநகர் பகுதிகளிலிருந்து நகரிற்கு இச்சிறுவர் தொழிலாளிகள் கடத்திவரப்பட்டு குறைந்த ஊதியத்தில், பலவந்தமாக வேலைக்குட்படுத்தப்படுகிறார்கள் என இக்கட்டுரை குறிப்பிடுகிறது.

## போரினால் பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்தோர்

31. **மரிக்கார், மரிலின்.** “*சிறுவர் போசணைக் குறைபாட்டுக்கு ஆயுத மோதல்களின் பங்களிப்பு*”. தினக்குரல். 12 மார்ச், 2000.

இக்கட்டுரையானது இலங்கையில், குறிப்பாக போரினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் சிறுவர்களின் உடல்நலம் தொடர்பாக சிறுவர் உரிமைகள் மீதான ஓர் கருத்தரங்கு மற்றும் அறிக்கைகளை அடிப்படையாகக் கொண்டது. ஆசிரியர் குறிப்பிடுகையில், நாட்டின் ஏனைய பகுதிகளுடனான சிறுவர் போசாக்கின்மை மட்டமான 33% உடன் ஒப்பிடுகையில், வன்னிப் பிரதேசத்தில் 5 வயதிற்கும் குறைந்த சிறுவர்கள் மட்டத்தில் இது 67% ஆக உள்ளது என்கிறார். போரினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில், தொடர்ச்சியான இடப்பெயர்வு, உணவுப் பொருட்கள் மற்றும் அடிப்படைத் தேவைகள் கிடைக்கப்பெறுவதில் போதிய வழிவகைகள் இல்லாமை, அதே போன்று போர் பீதிகளிற்குள்ளான சமூகம் முகம் கொடுக்கும் சமூக உளவியல் பிரச்சினைகள் போன்றவையே சிறுவர் உடல்நலம் கேடு நிலையடைவதற்கான பிரதான காரணங்களாக உள்ளன.

32. **சதாசிவம், S.G.S.** “*வடக்கில் 280,000 சிறுவர் இடம்பெயர்வு, போசாக்கின்மை 67% உயர்வு: நோர்வே நாட்டு அரச சார்பற்ற நிறுவனம் தகவல்*”. வீரகேசரி. 1 மார்ச், 2000.

இச்செய்திக் கட்டுரையின்படி, வடக்கு கிழக்கிலான நீண்ட யுத்தம் போஷாக்கு குன்றிய 280,000 சிறுவர்களை இடம்பெயரச் செய்துள்ளது. வன்னிப் பிரதேசத்தில் போசாக்கின்மை 67%ஆக உயர்ந்துள்ளதுடன், இதற்கு சமாந்தரமாக ஆயுத மோதல்கள், சிறுவர்களின் உரிமை மீறல்களினால் சிறுவர் துஷ்பிரயோகங்களும் அதிகரித்துள்ளதாக நோர்வே நாட்டின் "ரெட் பார்னா" நிறுவனம் தெரிவிப்பதாக கூறுகிறது.

33. *"பிள்ளைகள்: சமாதானத்தின் சரணாலயங்கள்: ஆக்கப் பணிக்கு ஒரு அழைப்பு"*. (s,n), (s,l) மே 1998. 11 பக்கம்.; பின்னிணைப்பு.

இக்குறிப்பேடானது, யுத்தத்தில் சிறுவர் தொடர்பான பிரச்சினைகள் கருவிகளாக பாவிக்கப்படுவது பற்றிய கலந்துரையாடலில் சிறுவர்கள் மீதான மோதலின் தாக்கங்கள் பற்றிய மீளாய்வு செய்யும், கொள்கைத் திட்டமிடுவோர், அரச அதிகாரிகள், மதகுருமார், சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் சமூகத் தலைவர்கள் ஆகியோரின் கூட்டு முயற்சியாகும். இது நடைபெறும் சிவில் யுத்தத்தில், சிறுவர் துஷ்பிரயோகத்திற்குள்ளாகும் நிலைமைகளில் கோட்பாடுகள் மற்றும் கீழ்க்காணும் பரிந்துரைக்கப்பட்ட நடவடிக்கைகள் பற்றிக் கூறும் இலங்கை மீதான *மச்செல் அறிக்கை பற்றி குறிப்பிடுகிறது.

- இடம்பெயர்ந்த மற்றும் கைவிடப்பட்ட சிறுவர்களிற்கான உதவிகள்
- அடிப்படைத் தேவை மற்றும் சிறுவர் கல்விக்கான வழிவகைகள்
- போரினால் பாதிக்கப்பட்ட சிறுவர்களின் உளவியல் தேவைகளுக்கான உதவிகள்
- மனிதாபிமான வழங்கல்கள் மற்றும் சேவைகளுக்கான உதவிகள்
- ஆயுதப் போராட்டம் அல்லது அது தொடர்பான நடவடிக்கைகளுக்கு 18 வயதிற்கும் குறைவான சிறுவர்கள் சேர்த்துக்கொள்ளப்பட மாட்டார்கள் என்பதை உறுதிப்படுத்துதல்
- மனிதப்பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காக நிலக்கண்ணிவெடி ஆபத்துக்களை இல்லாததாக்கல்
- சிறுவர் மற்றும் பெண்கள் தொடர்பான சர்வதேச பொருத்தனைகளுக்கு அமைவாக தேசிய சட்டங்களை வரைதல்

---

* சிறுவர் மீதான ஆயுத மோதல்களின் தாக்கம் பற்றிய கிறேஸ் மக்செல் அறிக்கை. ஐ.நா. மற்றும் 'யுனிசெப்' நிறுவனங்களால் வெளியிடப்பட்டது, 1996.

- சிறுவர்கள் 'சமாதானத்திற்குரிய பகுதியினர்' என்பதற்கு ஆதரவாக தொடர்பாடல்/ஆலோசணைப் பிரச்சாரங்களை ஆரம்பித்தல்
- சிறுவர் உரிமைகளை மேம்படுத்துவதில் நிறுவனங்களை வலுப்படுத்தல்/ஸ்தாபித்தல்

34. **மரிக்கார், மரிலின்** "*இளைஞர் வேலையில்லாமல் இருக்கும் போது சிறுவர்கள் வேலைக்கமர்த்தப்படுவது ஏன்?*". தினக்குரல். 9 ஜுலை, 2000.

நாட்டில் இளைஞர் வேலையில்லாமை அதிகரிக்கையில் அதற்கெதிராக உயர்ந்தளவிலான சிறுவர் உழைக்கும் நிலைமைகள் காணப்படுவதற்கான காரணங்களை இக்கட்டுரை நோக்குகிறது. இந்தியா, பாகிஸ்தான், மற்றும் பங்களாதேஷ் ஆகிய நாடுகளில் அநேகமாக முறைசாராத துறைகளில் சிறுவர்கள் வேலைக்கமர்த்தப்படுவதை காணக் கூடியதாகவுள்ளது. ஏழ்மையான வீடுகளிலிருந்து வரும் சிறுவர்கள் பலவிதமான சிறுவர் துஷ்பிரயோகங்களுக்கும், உழைப்புச் சுரண்டலிற்கும் ஆளாகின்றனர். இக்கட்டுரை, சிறுவர் உழைப்பை தடை செய்துள்ள இலங்கையின் சிறுவர் பாதுகாப்புச் சட்டத்தை மேற்கோள் காட்டுகிறது. இருப்பினும், கணிசமானளவு சிறுவர்கள் வேலைக்கமர்த்தப்பட்டு, அவர்கள் பாடசாலைக்கு செல்வது மறுக்கப்படுகிறது. சிறுவர் உழைப்பை இல்லாதொழிப்பதற்கு பொது மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தப்படல் வேண்டும், அன்றேல், இச்சட்டங்களினால் சிறிதளவு பயனேயுள்ளது என இக்கட்டுரை வலியுறுத்துகிறது.

## 2.3.3. இளைஞர்

### அமைப்பு

35. **பார்த்திபன், C.** "*புதிய நூற்றாண்டு இளைஞர்களின் எதிர்பார்ப்புகள் நிறைவேறுமா?*". மற்றும் குழுவினரும். தினகரன். 2 ஜனவரி 2000

புத்தாயிரமாம் ஆண்டு தொடங்கும் இவ்வேளையில் இலங்கை இளைஞர்களின் ஒட்டுமொத்த அபிலாசைகள் தொடர்பாக தெரிவிக்கப்பட்ட கருத்துக்கள் பின்வருவனவற்றை உள்ளடக்கியுள்ளது.

- நாட்டின் எந்தப் பாகத்திலும் ஒரு சுற்றுச்சூழல் கல்வி;
- குற்றங்களுக்கும் மேலும் கடுமையான தண்டனைகள்;
- தேசிய ஒருமைப்பாட்டுக்கான இனப்பிரச்சினையின் தீர்வு.

நேர்காணப்பட்டவர்கள் நாட்டின் பல்வேறு பகுதிகளையும் சார்ந்த பல்வேறு இன, மத மற்றும் வர்க்கப் பின்னணியையும் சார்ந்தவர்களாவர். இளைஞர் தேவைகளின் வழிவகைகளில் குறைபாடுகளையும் விளைவிக்கும் இனமுரண்பாடுகள் பற்றியும் இதேவித கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டன.

### கிராம மற்றும் நகர்ப்புற வறுமை

36. *"இளம் பராயக் குற்றவாளிகள் அனுபவிக்கும் அவலங்கள்". பக்கம் 12.* <u>பிரவாகினி</u>. 19 ஜனவரி 2004.

இச் செய்தி மடல், தென் இலங்கையின் தண்டனை நிலையங்களிலுள்ள இளைஞர்கள் மற்றும் இளஞ் சிறுவர்கள் தொடர்பான பிரச்சினைகளைச் சுருக்கமாக தருகிறது. இது சீர்த்திருத்தப் பள்ளிகளில், அடிப்படைத் தேவைகளான கல்வி, மருத்துவ வசதிகள் மற்றும் மட்டுப்படுத்தப்பட்ட நடமாட்டம்/சுதந்திரம் போன்ற வாழ்க்கை நிலைமைகள் மட்டுப்படுத்தப்பட்ட நிதி உதவிகள் காரணமாக சீர்கெட்டிருப்பது தொடர்பாக குறிப்பிடுகிறது. மனித உரிமைகள் நிறுவனத்தால் மேற்கொள்ளப்பட்ட மதிப்பீடு, அநேகமான இச் சிறுவர்கள் கிராமப்புற மற்றும் நகர்புறங்களின் ஏழ்மையான வீடுகளிலிருந்து வந்தவர்கள் என்பதுடன் பல்விதமான துஷ்பிரயோகங்களுக்கும் ஆளாகி சட்ட உதவிகளுக்கு வழியற்றவர்களாக உள்ளனர் என தெரிவித்தது. இந்நிறுவனம் அவர்களுக்கு உதவுவதற்கான முயற்சிகளில் ஈடுபடுகிறது, இதன் மூலம் அவர்கள் தங்களது புணருத்தாரணம் மற்றும் மறுசீரமைப்புக் காலத்தில் வாழ்வதற்கான சிறந்த சூழலையும், அடிப்படைத் தேவைகளையும் பெற்றுக்கொள்ள முடியும்.

37. *யட்டியாந்தோட்டை: தோட்டப்புற இளைஞர், யுவதிகளுக்கு வேலை வாய்ப்பு பெற்றுக்கொடுக்கத் திட்டம்".* <u>வீரகேசரி</u>. 19 ஜூன் 2000.

தோட்டப்புற சமூக வேலையற்ற இளைஞர்களுக்கு தொழிற்பயிற்சியை வழங்கும் விதமாக யட்டியாந்தோட்டை மெதடிஸ்ட் திருச்சபை ஒரு நம்பிக்கை நிலையத்தை ஆரம்பித்துள்ளது. தச்சுவேலை, குழாய் திருத்த வேலைகள், தையல் மற்றும் பல தொழில்கள் என்பவற்றில் இத் தொழிற்

பயிற்சிகள் வழங்கப்பட்டன. இப்பயிற்சிகளின் முடிவில் பயிலுனர்கள் வாய்ப்புள்ள தொழில்தருநர்களிடம் வழிகாட்டப்பட்டனர்.

### போரினால் பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்தோர்

38. **இரத்தினலிங்கம், K.** "*வடக்கு- கிழக்கு மக்களுக்கு ஆறுதல் அளிக்கும் சர்வதேசச் செஞ்சிலுவைச் சங்கத்தின் பணிகள்*". வீரகேசரி. 14 மே, 2000.

சர்வதேச செஞ்சிலுவை குழுவின் (ICRC) பணிகளைச் சுருக்கமாக மதிப்பாய்வு செய்யும் இக்கட்டுரை, திருகோணமலை மாவட்டத்தில், இளைஞர்களின் இயல்திறனை விருத்திசெய்யும் நடவடிக்கைகளின் ஏற்பாடுகள் பற்றி விளக்குகிறது. போரினால் பாதிக்கப்பட்ட நூற்றுக்கணக்கான இளைஞர்களுக்கு சுயதொழில் வாய்ப்புக்களை தேடிக்கொள்வதற்கேதுவாக குறுகிய கால திறன் பயிற்சித் திட்டங்கள் மூலம் பயிற்சிகள் வழங்கப்பட்டு, சிறு அளவிலான தொழில் முயற்சியாளர்களுக்கான கடன் வசதி வழிவகைகளுக்கும் வழிகாட்டப்படுகின்றனர். குறிப்பாக உள்ளூர் யுத்தங்களினால் பாதிக்கப்பட்ட, வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழ்கின்ற இளைஞர்களுக்கு கணினி மென் - பொருளிற்கான பயிற்சிநெறியை வழங்குவதற்கான திட்டங்களும் மேற்கொள்ளப்பட உள்ளன.

## 2.4 உழைப்பு, தொழில் மற்றும் வாழ்வாதாரம்

### அமைப்பு

39. **நித்தியானந்தம் V.** "*இலங்கை அரசியற் பொருளாதாரம்: 1948-1956: வர்க்க இனத்துவ நிலைப்பாடுகள்*". (2ம் பதிப்பு) கொழும்பு, குமரன் புத்தக இல்லம். 2002. 269 பக்கங்கள்; உசாத்துணை; நூலாசிரியர் அட்டவணை.

இப்பதிப்பு, இலங்கையில் இன மோதல்கள் தோன்றியதன் அரசியல் மற்றும் பொருளாதாரப் பின்னணிகளை, சமூகங்களுக்கிடையிலான பிரச்சினைகளுக்கு வழிகோலிய தேசிய/வர்க்கப் பிரச்சினைகள் பற்றிய உட்பார்வையுடன் மீளாய்வு செய்கிறது. இந்நூல் பின்வருவனவற்றை ஆராய்கிறது.

- தேசிய முதலாளித்துவத்தை நோக்கிய முயற்சிகள்;
- நாட்டில் பொருளாதார மற்றும் அரசியல் மாற்றங்களினால் அவதானிக்கப்பட்ட முதலாளித்துவ வகுப்பின் 'தோற்கடிப்பு'.

இந்நிலைமைகளில், தமிழ் மக்களிடையே தொழிலாளர் எனும் ஒற்றுமையுணர்வை முன்னேற்றுவதில் இடதுசாரிகளினது பங்கையும், இலங்கையில் இனத்துவேஷத்திற்கு வழிகோலிய வகுப்புவாத கருத்துக்கள் பற்றியும் இந்நூலாசரியர் ஆராய்கின்றார்.

40. *"வெளிநாடு செல்வோரின் உடல்நலம் தொடர்பாக அறிக்கை நிலவரம்". பக்கம் 10-20.* புலம்பெயர்வோர் சேவை மையத்தின் செய்தி மடல். தொகுதி 8 இல3, 2006.

இலங்கையில் புலம்பெயரும் தொழிலாளர்களின் உடல்நலம் தொடர்பாக *CARAM [3]இனால் தயாரிக்கப்பட்ட அறிக்கை புலம்பெயர்வோர் சேவை மையத்தின் செயற்பாடுகள் பற்றித் தெரிவிக்கின்றது. இம்மையம் பின்வரும் சேவைகளை வழங்குகிறது.

- உடல்நலம் சம்பந்தமான விபரங்களைப் பெறுவதற்கான வழிவகைகள்;
- மருத்துவச் சிகிச்சைகள் மற்றும் அதன் பின்னான, சேவை *SLBFE[4] இனால் ஸ்தாபிக்கப்பட்ட ஊழியர் நலன்புரி நிதியத்தின் கீழான ஆயுட் காப்புறுதி;
- தொழில் செய்யும் நாடுகளில் உடல்நலக்காப்பிற்கான வழிவகைகள்.

வெளிநாடுகளில் அவர்களது சேவைகள் அதிகரிப்பதற்கான பரிந்துரைகளை வழங்குகையில் தேசிய உடல்நலத் திட்டங்களிற்கமைய, புலம்பெயரும் தொழிலாளர்களது உரிமைகளை பாதுகாப்பது மற்றும் மேம்படுத்துவதில் SLBFEஇனால் வகிக்கப்படும் பாத்திரம் பற்றியும் இவ்வறிக்கை குறிப்பிடுகிறது.

---

[3] Coordination for Action Research on AIDS and Mobility

[4] Sri Lanka Bureau of Foreign Employment

## கிராம மற்றும் நகர்ப்புற வறுமை

41. *“இறக்காமக் குளத்தைப் புனரமைக்குமாறு நீர்ப்பாசன அமைச்சிடம் கோரிக்கை”.* <u>வீரகேசரி</u>. 15 நவம்பர், 2006.

அம்பாறை மாவட்டத்தின் விவசாயிகள் மற்றும் பயிர்ச்செய்கையாளர்கள், இறக்காமம், சம்மாந்துறை மற்றும் நிந்தவூர் ஆகிய கிராமங்களும் நீர் வழங்கும் இறக்காமம் குளத்தைப் புனரமைக்கும்படி நீர்ப்பாசன அமைச்சிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். இவற்றுள், பயிர்ச்செய்கை நிலங்கள். தனியார் பாவனைக்காக காணித்துண்டுகளாக மாற்றப்படுகின்ற தீவிரமான பிரச்சினையை இறக்காமம் எதிர்நோக்குகிறது. இது, நீர் கொள்ளக்கூடிய மேற்பரப்பைக் குறைப்பதினால், பருவக்காலங்களில் வெள்ளப்பெருக்கை ஏற்படுத்துகிறது. இப்பிரதேசத்தில் வாழ்கின்ற விவசாய சமூகங்கள், இம்மக்களின் பிரதான ஜீவனோபாயமாகவுள்ள நெற்செய்கை மற்றும் நன்னீர் மீன்பிடிப்புகளிற்கு ஏதுவாக புனரமைத்துத் தரும்படி அமைச்சிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

42. *“இரும்பு உலோக கைத்தொழில் அபிவிருத்தி செய்ய கிராமிய கைத்தொழில் அமைச்சு நடவடிக்கை”.* <u>வீரகேசரி</u>. 17 நவம்பர், 2006.

பாத்ததும்பர தேர்தல் தொகுதியினுள் உடுகொட மற்றும் வத்துகம கிராமங்களைப் பற்றி, குறிப்பாக உலோக வேலைச் சிற்பிகளான இக் கைவினைத் தொழிலாளர்கள் கடும் வறுமை மட்டத்தில் வாழ்வது பற்றிக் குறிப்பிடுகிறது. இப்பாரம்பரிய கைவினைத் துறையின் பிரச்சினைகளை இனங்கண்டு, கிராமிய வங்களினூடாக கடன் வசதிகளுக்கான வழிகள் மற்றும் உபகரணங்களை வழங்குவதற்கான ஏற்பாடுகளை கைத்தொழில் மற்றும் சுய தொழில்களுக்கான அமைச்சு மேற்கொண்டுள்ளது.

43. **மஜீத், U.L.** *“அம்பாறையில் கரும்பு உற்பத்தித் தொழிலின் இன்றைய நிலை.”* <u>வீரகேசரி</u>. 21 நவம்பர், 2006

இக்கட்டுரை, அம்பாறை மாவட்டத்தில் கரும்புப் பயிற்செய்கை சீர்குலைந்துள்ளதையும், பயிர்ச்செய்கையாளர்கள் வறுமை நிலையால் பீடிக்கப்பட்டிருப்பதையும் சுட்டிக்காட்டுகிறது. 1995களிலிருந்து இப்பயிர்ச்செய்கை வீழ்ச்சியடைவதைக் காணக்கூடியதாக உள்ளது. உள்ளூர் பாவனையில் சீனி பெருமளவில் இறக்குமதி செய்யப்பட்டு

உள்ளூர் சீனி உற்பத்தியாளர்கள் ஓரம் கட்டப்படுவது குறித்து பயிர்ச்செய்கையாளர்கள் தங்கள் விசனத்தைத் தெரிவித்தனர். மேலும் போதியளவில்லாத நீர்ப்பாசன வசதிகளும், சீனி உற்பத்தித் தொழிற்சாலைகள் சரிவர இயங்காததும் கரும்புப் பயிர்ச்செய்கை வீழ்ச்சியுற காரணமாகின. அரசு இவ்விடயத்தில் தலையிட்டு உள்ளூர் சீனி உற்பத்தியை அதிகரிக்கவும், இப்பயிர்ச்செய்கையாளர்களின் ஜீவனோபாயங்களிற்கு வழிசெய்யவும் வேண்டுமென இக்கட்டுரையாசிரியர் வேண்டுகிறார்.

44. *“முகத்துவாரம் வெட்டப்பட்டமை குறித்து விவசாயிகள் கவலை.”* வீரகேசரி. 21 நவம்பர், 2006.

வாவியின் நீர் கடலில் சென்று சேர்வதற்கு ஏதுவாக, வாவிக்கும் கடலிற்கும் இடையிலான மண்திட்டுக்களை வெட்டித்திறப்பதற்கு நீர்ப்பாசனத் திணைக்களம் மேற்கொண்ட தீர்மானம் குறித்து மட்டக்களப்பு மற்றும் அம்பாறை மாவட்ட விவசாயிகள் தங்கள் கடுமையான விசனத்தைத் தெரிவித்துள்ளனர். போதியளவில்லாத நீர்ப்பாசன வசதிகளுடன் போராடும் விவசாயிகளுக்கு, இந்த நடவடிக்கையானது பயிர்ச்செய்கை நிலங்களுக்கான நீர் வழங்கலை மேலும் குறைத்துள்ளதுடன் அரிசி, தேங்காய், மிளகாய் மற்றும் வெங்காயம் ஆகியவற்றின் விலை அதிகரிப்பிலும் பிரதிபலித்துள்ளது.

45. *“பெரிய வெங்காயம் உற்பத்தி குறித்து அரசு அக்கறை செலுத்தவேண்டும்.”* வீரகேசரி. 7 நவம்பர், 2006.

நாட்டின் 40% தேவைகளை மாத்தளை மாவட்டத்தின் *வெங்காயப்[5] பயிர்செய்கை தீர்க்கிறது. சுற்றுச் சூழலிற்குண்டாகும் தீங்குகளினால் புகையிலைப் பயிர்ச்செய்கை நிறுத்தப்பட்டு இம்மாவட்டத்தின் விவசாயிகள் அதிகளவிலான வெங்காயத்தை உற்பத்தி செய்கின்றார்கள். வெங்காய இறக்குமதியில் கட்டுப்பாடுகளை விதித்து, சிறந்த ரக விதை வெங்காயம், போதுமான களஞ்சியப்படுத்தும் வசதிகள் மற்றும் உற்பத்திப் பொருட்களை போக்குவரத்து செய்ய வினைத்திறனான மேம்பட்ட ரயில் மற்றும் வீதி வசதிகள் உட்பட்ட சந்தைப்படுத்தும் திட்டங்கள் மூலம் உள்ளூர் சந்தையை ஊக்குவிப்பதற்கான முயற்சிகளில் அரசு ஈடுபட வேண்டிய தேவையை இக்கட்டுரை வலியுறுத்துகிறது.

---

[5] *பெரிய வெங்காயம், அல்லது பம்பாய் வெங்காயம்

### போரினால் பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்தோர்

46. *“குடாநாட்டில் யூரியா உரம், கிருமிநாசினி இன்மையால் நெற்பயிர்ச்செய்கை பாதிப்பு.”* வீரகேசரி. 22 நவம்பர், 2006.

நெற்பயிர்ச்செய்கை மற்றும் வேறு பயிர்களின் செய்கைக்கு அவசியமான யூரியா, பசளைகள் மற்றும் எரு என்பவற்றுக்கான கடும் பற்றாக்குறைக்கு யாழ். குடாநாடு முகம்கொடுத்துள்ளது. மழை நீர் போதியளவில் இருந்த போதிலும், பசளைகளின்மை உற்பத்தியை குறைத்து, தங்கள் ஜீவனோபாயத்தையும் பாதித்துளளதாக விவசாயிகள் கருத்து தெரிவிக்கின்றனர். தங்கள் விவசாயத் தேவைகளுக்கு தேவையானவற்றை கிரமமாக வழங்குவதை உறுதி செய்யும்படி இவ்விவசாயிகள் அரசிடம் கோரியுள்ளனர்.

## 2.5 பெருந்தோட்டத் தொழிலாளர்கள்

47. **கொற்றவை**. *“பிரச்சினைகள் தீர்க்கப்படும் வரை உரிமையை உரத்துச் சொல்வோம்”*. வீரகேசரி. 11 ஜுன், 2006.

இச்செய்திக் கட்டுரை, தொழில் வாய்ப்பு மற்றும் பெருந்தோட்டச் சமூகத்தில் தகுதியான இளைஞர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் போன்ற மனித உரிமைகள் தொடர்பான அடிப்படைத் தேவைகள் பற்றி சுட்டிக் காட்டுகிறது. வறுமை, போதிய போக்குவரத்து வசதிகளின்மை மற்றும் சீரற்ற அபிவிருத்தி நடவடிக்கைகளிற்கான முன்னெடுப்புக்களிற்கு இடையிலும் பெருந்தோட்டப்புறச் சிறுவர்களிடையேயான கல்வியின் தரம் கணிசமானளவு முன்னேற்றம் அடைகின்றது. சமூகத்தில் தகுதியானவர்கள் ஆசிரியர்களுக்கான வெற்றிடங்களுக்கு விண்ணப்பித்து கல்வி அமைச்சினால் நடாத்தப்பட்ட நேர்முகத் தேர்வுகளுக்கும் தோற்றியுள்ளனர். எப்படியிருந்த போதிலும், இந்தியாவிலிருந்து ஆசிரியர்களை இறக்குமதி செய்தும், ஓய்வுபெற்ற ஆசிரியர்களை மீளவும் நியமித்தல் போன்ற ‘அரசியல் முயற்சிகளால்’ உள்ளூர் மக்களை ஓரங்கட்டும் செயல்களிலும் முனைப்புக்கள் காட்டப்படுகின்றன. சமூகத்திலுள்ள தகுதியான இளைஞர்களுக்கு வாய்ப்புக்கள் வழங்கப்பட்டு அதன் மூலம் ஆசிரியத் தொழிலில் அவர்கள் ஈடுபட்டு தங்கள் சமூகத்தின் முன்னேற்றத்திற்கு பங்களிப்பதை இக்கட்டுரை வலியுறுத்திக் கோருகின்றது.

48. **முத்துலிங்கம், P.** *"நூற்றாண்டு அபிவிருத்தி இலக்கும் மலையகமும்".* வீரகேசரி. 15 ஒக்டோபர், 2006.

பெருந்தோட்டங்களில் வாழ்க்கைத் தரங்களை மேம்படுத்துவதில் காத்திரமான பங்கைவகித்த தொழிற்சங்கங்கள் உள்ள பெருந்தோட்ட சமூகத்தை இலக்காகக் கொண்ட மிலேனிய அபிவிருத்தி இலக்குகள் தொடர்பாக இக்கட்டுரை குறிப்பிடுகிறது. கொள்கை வகுப்பாளர்களால் அண்மையில் ஏற்றுக்கொள்ளப்பட்ட, இம்மக்களின் வீட்டு அல்லது காணி அல்லது உரிமைகளிலேயே ஏழ்மையான இச் சமூகத்தின் விடியல் தங்கியுள்ளது. உத்தேசிக்கப்பட்ட அபிவிருத்தி இலக்குகள் பின்வரும் விடயங்களை சூழ்ந்துள்ளன – போக்குவரத்துப்பாதை அபிவிருத்தி, பால்நிலை சமத்துவம், சிறுவர் தேவைகள், முதியோர் நலன்கள் மற்றும் சமூகப் பொழுதுபோக்கு வசதிகள். இருந்தபோதிலும் மக்கள் பிரதிநிதிகளின் 'அரசியல் விருப்பு' இவ்வபிவிருத்தி முயற்சிகளுக்கு குறிப்பிடத்தக்க தடையாக இருக்கலாம் என்பதை இந்நூலாசிரியர் அவதானிக்கிறார்.

49. **சிவச்சந்திரன், R.** *"மலையகத் தமிழ் மக்கள் குடித்தொகை பண்புகளும் சமூக பொருளாதார நிலைமைகளும்". பக்கம் 9-30 உசாத்துணை.* மலையகத் தமிழ் மக்கள்/ R. சிவச்சந்திரன் மற்றும் குழுவும். சென்னை, பொன்னி பிரசுரம். 1987. 50 பக்கம், உசாத்துணை.

இவ் விமர்சனக் கட்டுரை தேசிய பொருளாதாரத்தை முன்னேற்றும் பெரும் தொழிற்சக்தியான பெருந்தோட்டத் தமிழர்களின் சமூகப் பிரச்சினைகள் மீதானதாகும். இதன்படி பெருந்தோட்டத் தொழிலாளர்கள் உழைப்புச் சுரண்டல், குறைந்த ஊதியம், கீழான சமூக பொருளாதார நிலைமைகள் போன்றவற்றிற்கு ஆளாகின்றார். கல்வி மற்றும் வேறு அடிப்படை தேவைகளுக்கு வழிவகைகளற்று பெருந்தோட்டச் சமூகத்தை நவீன அடிமைகளாக தொடர்ந்தும் வைத்திருக்கும் அரசியல் மனப்பாங்கு பற்றி இக்கட்டுரை விசேட கவனம் செலுத்துகிறது.

50. *"தோட்டத் தொழிலாளர்களுக்கு மாதச் சம்பளத்துடன் வாழ்க்கைச் செலவுப்படியும் வழங்குக: தொழில் அமைச்சிடம் இ.தே.தொ.கா. (இலங்கை தேசிய தொழிலாளர் காங்கிரஸ்) கோரிக்கை".* வீரகேசரி. 14 ஜனவரி, 2000.

பெருந்தோட்டத் தொழிலாளர்கள் அவர்களது சம்பளத்திற்கு மேலதிகமாக வாழ்க்கைச் செலவுக்கான படியும் வழங்கப்படல் வேண்டுமென தொழில் அமைச்சிடம் இலங்கை தேசிய தொழிலாளர் காங்கிரஸ் கோரிக்கை விடுத்துள்ளது. உயரும் வாழ்க்கைச் செலவினால் தொழிலாளிகள் பெரும் சுமைகளிற்குள்ளாகியிருப்பதால், தொழிற்சங்கங்களுடன் கலந்தாலோசித்து அமைச்சு, ஊதியத்துடன் வாழ்க்கைச் செலவுப்படியையும் வழங்கல் வேண்டுமென காங்கிரஸ் வலியுறுத்துகிறது.

## நூலாசிரியர் அட்டவணை


| | |
|---|---|
| அசோக்குமார், K. | 17 |
| கொழும்பு மாநகர சபை | 8,9 |
| இரத்தினலிங்கம், K. | 38 |
| GTZ | 9 |
| ஹிஸ்புல்லா, S.H. | 18 |
| இலங்கை தேசிய சமாதானப் பேரவை | 14 |
| ஜோக்கிம், P. | 27 |
| கோற்றவை | 47 |
| கிருஷ்ணதேவி, E. | 25 |
| மணியம், P.S | 28 |
| மாணிக்கவாசகம், P. | 19 |
| மாதர் கல்வி வட்டம் (WEC) | 4 |
| மஜீத், U.L. | 43 |
| மரிக்கார், மர்லின் | 31,34 |
| மோகன், சிவராஜா | 12 |
| முகுந்தன், P. | 26 |
| முத்துலிங்கம், P. | 48 |
| நித்தியானந்தம், V. | 39 |
| பார்த்திபன், C. | 35 |
| சச்சிதானந்தன், சாந்தி | 7 |
| சாந்தன், P.V. | 11 |
| சந்திரப்பிரகாஷ், S. | 30 |
| சண்முகலிங்கம், N. | 2 |
| சதாசிவம், S.G.S. | 32 |
| சர்வதேச தொழில் தாபனம் (ILO) | 24 |
| செல்வராணி, I. | 23 |
| செந்தில்வேல், C.K. | 1 |
| சிவச்சந்திரன், R. | 49 |
| சிவம், S.P. | 29 |
| ஸ்ரீ கோவிந்தசாமி, S. | 6 |
| தமிழ்மாறன், V.T. | 15 |
| தியாகராசா, S. | 21 |

cepa
centre for poverty analysis
29, Gregory's Road, Colombo 7, Sri Lanka
T. +94 (011) 2676 955-8, 2667 967-8
F. +94 (011) 2676 959
E. info@cepa.lk
www.cepa.lk

ISBN 978-955-1040-42-0

9 789551 040420 >

Printed by Karunaratne & Sons Ltd.